# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

---

*(2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, சனவரி மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்**

[2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 11/2010

**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப் பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் 5அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 5 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அச்சட்டவாக்கத்தின் 5அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சுகின்ற கடன்கள் தொடர்பாக 3,4, 5 ஆகிய பிரிவுகளின் ஏற்புடைமை.

5அ. (1) எக்கடன் தொடர்பில் தவணை தவறுகை புரியப்படுகின்றதோ அக்கடன் தொகை ஐந்து மில்லியன் ரூபாவுக்குக் குறைவாகவிருக்குமிடத்து, அத்தகைய கடனை அறவிடுவதற்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி வழக்கெதுவும் தொடங்கப்படுதலாகாதென்பதுடன், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 4ஆம் அல்லது 5ஆம் பிரிவின் நியதிகளின்படி நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலுமாகாது:

ஆயின், எவ்வாறாயினும் தவணை தவறுகையின் நேரத்தில் அத்தகைய தவணை தவறியவருக்கு வழங்கப்பட்ட கடன்மீது வங்கிக்கு வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ள தொகையைக் கணிப்பிடும்

போது, அத்தகைய கடன்மீது திரண்ட வட்டியும் மற்றும் அதன்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டமும் கருத்திற் கொள்ளப்படுதலாகாது.

(2) இச்சட்டத்தின் 5அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள், ஏதேனும் அத்தகைய வங்கியால் கடன்கள் அறவிடுதல் தொடர்பான ஏதேனும் ஏற்பாடு எவ்வாறிருப்பினும், அப்போதைக்கு வலுவிலுள்ள எழுத்திலான ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டிணைத்தல் கட்டளையொன்றினால் தாபிக்கப்பட்ட ஏதேனும் வங்கி தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"பொருள் கோடல்.*

22. "வங்கி" என்பது, எக்கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதி தொடர்பில் தவறுகை செய்யப்பட்டதோ, அவ்வேதேனும் கடன், மேலதிகப்பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதிக்கான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் அசையும் அல்லது அசையாத ஆதனத்தை உடைமையில் எடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்று அல்லது உரிமம்பெற்ற விசேட வங்கியொன்று எனப் பொருள்படும்.".

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்